**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF I ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No. 4496/2019** **Date: 19.02.2026**

**PW- 1**

Name : V.Annakumar

Father's Name :

Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of February 2026.

-----------------------------------------------------------------------------------------

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**</u>

என்னிடம் காட்டப்படுவது பிரதிவாதி வாதி நிறுவனத்திற்கு 25.09.2016 தேதியிட்ட அனுப்பிய மின்னஞ்சல் மற்றும் வாதி நிறுவனத்தில் இருந்து பிரதிவாதிக்கு 27.09.2016 அன்று அனுப்பிய பதில் மின்னஞ்சல் என்றால் சரிதான். அது **பிவாசாஆ.1.** பிவாசாஆ.1 ல் உள்ள 25.09.2016 தேதியிட்ட வாதி அனுப்பிய மின்னஞ்சலில் அவரது தனிப்பட்ட காரணத்தினால் 23.09.2016 அன்று பணியில் இருந்து ராஜினாமா செய்வதாக தெரிவித்தும் கம்பெனி CUG Sim card, Laptop, ID Card, Business Card, Data Card அவை அனைத்தும் திரும்ப கொடுத்துவிட்டதாக கூறியுள்ளார் ஆனால் அவைகளை அவர் ஒப்படைக்கவில்லை. மேற்சொன்னவைகளை ஒப்படைக்கவில்லை என்றும் அதை ஒப்படைக்க வேண்டும் என்றும் 27.09.2016 ம் தேதி பிரதிவாதிக்கு மின்னஞ்சல் அனுப்பினோம். என்னிடம் காட்டப்படும் 21.10.2016 ம் தேதியிட்ட கடித்துடன் 27.10.2016 பிரதிவாதி வாதி நிறுவனத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். அவர் 24.09.2016 அன்றே மின்னஞ்சல்

மூலம் ராஜினாமா செய்து அனுப்பினார் அதற்குரிய Hardcopy ஐ 27.10.2016 கடிதத்துடன் அனுப்பி வைத்தார், மேற்சொன்ன கடிதங்கள் **பிவாசாஆ.2.**

27.10.2016 ம் தேதி கடிதத்தில் அவரை பணியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றும் பணி பலன்களை செட்டில் செய்யவேண்டும் என்று கேட்டுயிருந்தார் என்றால் சரிதான். 23.09.2016 ல் பிரதிவாதி அவரது வேலையை ராஜினாமா செய்து மின்னஞ்சல் செய்த பிறகு தான் உள்நோக்கத்துடன் பிரதிவாதிக்கு விளக்கம் கேட்டு காரணம் கோரும் அறிவிப்பு 26.10.2016 ல் அனுப்பினோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன காரணம் கோரும் அறிவிப்பு பிரதிவாதிக்கு பதில் தபாலில் அனுப்பிதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவர் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். நான் கோரும் ரூ20 லட்சம் நஷ்டயீடு கேட்பதற்காக காரணம் ஏதும் வழக்குரையில் சரியாக கூறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியால் வாதி நிறுவனத்திற்கு நஷ்டம் குறித்து நான் ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் பிரதிவாதி ராஜினாமாக அறிவிப்பு கொடுத்தத பிறகு அவரை பழிவாங்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் பொய். பிரதிவாதி வாதி நிறுவனத்தில் பணி செய்த காலத்தில் அவர் மீது எந்த வித புகாரும் இல்லை என்றும் சொன்னால் தவறு, அதனால் தான் அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறு. பிரதிவாதிக்கு வாதி நிறுவனம் தான் நஷ்டயீடு செலுத்த வேண்டும் என்று சொன்னால் தவறு.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Dt. 19.02.2026

I Addl. District Judge.